செய்தி வெளியீடு எண்.367/2010 நாள்: 20.5.2010

## தேசிய உணவு பாதுகாப்பு திட்டம் - (பயறுவகை)
## பயறுவகை (துவரை) 1000 எக்டர் செயல்விளக்கம்

வேலூர் மாவட்டத்தில் பயிரிடப்படும் பயறு வகை பயிர்களில் துவரை மிகவும் முக்கியமான பயிராகும். ஆனால் கடந்த சில ஆண்டுகளாக போதிய பருவ மழை இல்லாத காரணத்தால் துவரை சாகுபடி வருடா வருடம் குறைந்து வருகிறது. நாட்டின் பயறுவகை பயிர்களில் உற்பத்தியை பெருக்க மத்திய மற்றும் மாநில அரசுகள் தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 1000 எக்டர் செயல்விளக்கத் தளைகள் அமைத்து நவீன தொழில்நுட்பங்கள், தரமான விதைகள் ஒருங்கிணைந்த ஊட்ட சத்து நிர்வாக கிட்டுகள் மற்றும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு கிட்டுகள் ஆகியவற்றை 100% மான்யத்தில் வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

வேலூர் மாவட்டத்தில் திருப்பத்தூர் மற்றும் கந்திலி வட்டாரங்களில் மேற்படி 1000 எக்டர் செயல்விளக்க தளைகள் நடப்பு காரீப் பருவத்தில் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. இதனால் தற்போதைய துவரை உற்பத்தி திறன் 625கிலோ/எக்டர் என்ற அளவிலிருந்து 1200 கிலோ/எக்டர் என்ற இலக்கினை அடைய திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே திருப்பத்தூர் மற்றும் கந்திலி வட்டார விவசாயிகள் மேற்படி திட்டத்தில் பங்குபெற்று பயனடைந்து துவரை உற்பத்தி பெருக்கிட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**செய்தி வெளியீடு:**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**வேலூர்.**